செ.கு.எண்: 53 நா: 1.06.2011.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 1.06.2011

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தருமபுரி மாவட்ட பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள இராஜாஜி நீச்சல் குளத்தில் 31.5.2011 அன்று நீச்சல் பயிற்சி மேற்கொள்ளும் போது, தர்மபுரி மாவட்டம், வி.ஜெட்டிஹள்ளி, இளங்கோ நகரைச் சேர்ந்த திரு. திருப்பதி என்பவரின் மகள் செல்வி மீனா மற்றும் திரு. மாது என்பவரின் மகள் செல்வி விமலா ஆகிய இரு மாணவிகள் தண்ணீரில் மூழ்கி, மருத்துவமனைக்குக் கொண்டுச் செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

சிறுமிகளை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுமிகளின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9